Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 | நடுநிலை நாளிதழ் | ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., | DHINATH DHALAM Tamil & English daily Paper | ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 143 | புதன்கிழமை Wednesday | 25.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு rode

# “மேற்காசிய போர் பாதிப்பிலிருந்து மக்களைக் காக்க பிரதமர் மோடி தயாரா?” முதலமைச்சர் ஸ்டாலின் கேள்வி



சென்னை,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மேற்காசியப் போர்ச் சூழலால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கப் பிரதமர் மோடி எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

"எங்களைக் காக்கப் பிரதமர் தயாராக இருக்கிறாரா?"

மேற்காசியாவில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் அதன் பொருளாதாரத் தாக்கங்கள் குறித்துப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் "மக்கள் தயாராக இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது 'எக்ஸ்' (X) சமூக வலைதளப் பக்கத்தில் ஒன்றிய அரசை நோக்கிக் கடுமையான கேள்விகளை முன்வைத்துள்ளார்.

யார் தயாராக இருக்க வேண்டும்?

"மக்களைத் தயாராக இருக்கச் சொல்லும் முன், அவர்களைக் காக்க நீங்கள் (ஒன்றிய அரசு) தயாராக இருக்கிறீர்களா?" என்று முதலமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

மேற்காசியப் போரினால் ஏற்படக்கூடிய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதாரச் சரிவில் இருந்து இந்தியப் பொதுமக்களைப் பாதுகாக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள உருப்படியான நடவடிக்கைகள் என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மாநில அரசின் முன்மாதிரி செயல்பாடுகள்: ஒன்றிய அரசின் பதிலுக்காகக் காத்திராமல், தமிழ்நாடு அரசு ஏற்கெனவே பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்:

உணவு உற்பத்தித் தொழிற்கூடங்களுக்கு மின்சார மானியம் (யூனிட்டுக்கு ரூ. 2). சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (MSME) மின் சாதனங்கள் வாங்க மானியத்துடன் கூடிய கடன். உழவர் சந்தைகளில் விவசாயிகள் தடையின்றிப் பொருட்களை விற்பனை செய்ய அனுமதி என தமிழ்நாடு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் மவுனம்: சிலிண்டர் விநியோகம், வளைகுடா வாழ் தமிழர்களை மீட்பது மற்றும் எரிவாயு விநியோகக் கட்டுப்பாடு குறித்து ஏற்கெனவே கடிதம் எழுதியும், ஒன்றிய அரசிடமிருந்து முறையான பதில் இல்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

"இப்போது நாட்டின் கேள்வி ஒன்றுதான்; 'எங்களைக் காக்கப் பிரதமர் தயாராக இருக்கிறாரா?'" என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிரதமரை நோக்கி கேள்வி எழுப்பி உள்ளார்.

# திமுக கூட்டணியில் விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு இரட்டை இலக்க கோரிக்கையை கைவிட்டது ஏன்? திருமாவளவன் விளக்கம்



சென்னை: திமுக கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், 8 தொகுதிகளிலும் விசிகவின் பானை சின்னத்தில் தான் போட்டியிட உள்ளதாக திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

வரும் சட்டமன்ற தேர்தலில் தங்களுக்கு அதிக தொகுதிகள் வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி திமுக தரப்புக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தது. குறிப்பாக, திமுகவுடன் நடைபெற்ற முதற்கட்ட பேச்சுவார்த்தையில், உடன்பாடு எட்டப்படாத நிலையில் கடந்த வியாழக்கிழமை (மார்ச் 19) இரண்டாம்கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதிலும் திமுக-விசிக இடையே தொகுதி பங்கீடு தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. தங்களுக்கு கூடுதல் தொகுதிகள் வேண்டும் என விசிக தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

குறிப்பாக, கடந்த சட்டமன்ற தேர்தலில் விசிகவுக்கு 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், இந்த முறை கூடுதல் தொகுதி கேட்பதால் திமுக தலைமை இறுதி முடிவு எடுக்க முடியாமல் திணறி வந்தது.

இதற்கிடையே, நேற்று நடைபெற்ற விசிக உயர்நிலை கூட்டத்தி லும், வரும் சட்டப் பேரவை தேர்தலில் இரட்டை இலக்கத்தில் திமுகவிடம் தொகுதிகளை கேட்டு பெறவேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனால் விசிக, திமுக கூட்டணியில் தொடருமா? என்ற கேள்வி எழுந்தது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க ஸ்டாலினை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் இன்று சந்தித்துப் பேசினார். இதனையடுத்து வரும் சட்டமன்ற தேர்தலில் விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உடன்படிக்கை கையெழுத்தானது. 6 தனித் தொகுதிகள் மற்றும் 2 பொதுத் தொகுதியில் விசிக களம் காண உள்ளது.

ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து விசிக தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "எங்கள் கூட்டணியின் வெற்றியை முன்னிறுத்தி இந்த முடிவுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி உடன்பட்டிருக்கிறது. ஜனநாயக அரசியல் தமிழ் மண்ணில் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் தான் திமுகவுடனும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியுடனும் பயணிக்கிறோம்.

விசிகவுக்கு 8, கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா 5 என 18 தொகுதிகள், இடதுசாரி அரசியலை பாதுகாக்க போராடுகிற இயக்கங்களுக்கு திமுக வழங்கியிருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்றிரண்டு தொகுதிகளுக்காக முரண்பட்டு கூட்டணிக்குள்ளே சலசலப்பை உருவாக்கி, வெற்றிவாய்ப்பை சேதப்படுத்தி விடக்கூடாது என்ற பொறுப்புணர்வோடு இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். இதில் எங்களுக்கு மன நிறைவு உள்ளது

புதுச்சேரியில் ஒரு இடத்தை திமுக எங்களுக்கு ஒதுக்கியுள்ளது. வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் முடிந்துவிடும் என்பதால் அங்கு முன்னெச்சரிக்கையாக 3 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்தோம். 8 என்பதே எட்டிப்பிடி என்பதற்கான சைகை தான். மாநிலங்களவை சீட் கேட்டிருக்கிறோம். ஆனால் தற்போது அதற்கான அழுத்தம் கொடுக்கவில்லை.

8 தொகுதிகளிலும் விசிகவின் பானை சின்னத்தில் தான் போட்டியிடுவோம். எங்கள் பலம் பலவீனம் எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு தான் நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம்" என்றார்.

ஏற்கெனவே திமுக கூட்டணியில் காங்கிரஸ் 28, மதிமுக 4 , இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 5, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2, மனிதநேய மக்கள் கட்சி 2 மற்றும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அங்கம் வகிக்கும் தேமுதிக மற்றும் மநீம உடன் விரைவில் உடன்பாடு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலவச ஃபிரிட்ஜ், குடும்பத்துக்கு ரூ.10,000 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை



சென்னை:

\ 'ஒவ்வொரு குடும்பத்துக்கும் இலவச ஃப்ரிட்ஜ் வழங்கப்படும்' என்பது உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் அடங்கிய அதிமுகவின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

சென்னை அதிமுக தலைமையகத்தில் பழனிசாமி வெளியிட்ட அதிமுக தேர்தல் அறிக்கை 2026-ல் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்:

> மகளிருக்கு மாதம் 2000 ரூபாய் வழங்கப்படும்.

> நகரப் பேருந்துகளில் ஆண்களும் இலவசமாக பயணம் செய்யலாம்.

> குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆண்டுக்கு 3 சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும்.

> பெண்கள் இரு சக்கர வாகனம் வாங்க ரூ.25,000 மானியமாக வழங்கப்படும்.

> குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ பருப்பு, ஒரு லிட்டர் எண்ணெய் வழங்கப்படும். > ஒவ்வொரு குடும்பத்துக்கும் விலையில்லா ஃபிரிட்ஜ் வழங்கப்படும்.

> முதியோர் உதவித் தொகை ரூ.2000 ஆக உயர்த்தப்படும்.

> தமிழ்நாட்டில் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.10,000 நிதியுதவி வழங்கப்படும்.

> மாணவர்களுக்கான கல்விக் கடனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ளன. மீன்பிடி தடைக்காலம் நிவாரணம் ரூ. 12,000 ஆக உயர்த்தப்படும். சென்னையில் உச்சநீதிமன்ற கிளை அமைக்க வலியுறுத்தப்படும்.

இலங்கை தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வலியுறுத்தப்படும்.

100 நாள் வேலைத் திட்டம் 150 நாள்களாக உயர்த்தப்படும்.

ஜல்லிக்கட்டு போட்டியின்போது வீரர்கள் இறந்தால், அவர்கள் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிவாரணம்

பூசாரிகளுக்கான ஓய்வூதியம் உயர்த்தப்படும்.

தெரு நாய்கள், மாடுகளுக்கு விலங்குகள் நலக்காப்பகம் அமைக்கப்படும்.

தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை.

நெசவாளர் கூட்டுறவு சங்கம் மூலம் பள்ளி சீருடைகள், விலையில்லா வேட்டி, சேலை தயாரிக்கப்படும்.

10 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரியும் செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

மீண்டும் அம்மா மினி கிளினிக்குகள் தொடங்கப்படும்

அதிமுகவின் தேர்தல் அறிக்கையில் மொத்தம் 297 அறிவிப்புகள் அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாகவும் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் பிரேத்யேகமான நவீன குளியலறை உபகரணங்களின் 'பர்பிள் பே' பிரம்மாண்ட புதிய ஷோரூம் துவக்கவிழா நிகழ்ச்சி



கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் நவீன குளியலறை உபகரணங்களில் முன்னணிநிறுவனமான பர்பிள் பே - பிளிஸ்ஃபுல் பாத்ரூம்ஸ்' தனது புதிய பிரம்மாண்ட ஷோரூமை தொடங்கியுள்ளது.

கோவை ஆர்.எஸ்.புரம், பகுதியில் அமைந்துள்ள இந்த புதிய ஷோரூமை, நிறுவனத்தின் முக்கியப் பிரமுகர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் முன்னிலையில் ரிப்பன் வெட்டி இனிதே திறந்து வைத்தனர். புதிய இடம், புதிய அனுபவம் என்ற கருப்பொருளில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஷோரூமில், சர்வதேசத் தரம் வாய்ந்த நவீன குளியலறை வடிவமைப்புகள், பிரீமியம் ரக உபகரணங்கள், பாத் டப்கள், ஹீட் பம்ப் என்னும் நவீன தண்ணீர் சூடு செய்யும் சாதனங்கள்,ஸ்டெய்லெஸ் ஸ்டீல் பைப்கள்,தண்ணீர் சாப்டனர், மற்றும் வீட்டின் அழகை மேம்படுத்தும் வகையிலான பிரத்யேகக் கட்டமைப்புகள் வாடிக்கையாளர்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.இந்த நிகழ்ச்சியில் பேசிய நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ராம் சிவ பிரகாஷ் மற்றும் இயக்குனர் ரம்யா ராம் சிவ பிரகாஷ் கூறியதாவது.. வாடிக்கையாளர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த குளியலறைஅனுபவத்தை ஒரே கூரையின் கீழ் வழங்குவதே எங்களின் நோக்கம். கோவையில் பிரேத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள இந்த 3 தள ஷோரூம், வாடிக்கையாளர்கள் நேரில் வருகை தரும் போது அவர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, என தெரிவித்தனர்.

இந்தத் திறப்பு விழாவில் நகரின் முக்கியத் தொழில் அதிபர்கள், கட்டிடக் கலை நிபுணர்கள் பொறியாளர்கள் உள்அலங்கார நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (24.03.2026) 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பு பகுதியில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் நறுமணப்பொருட்களின் விதைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கைவிரல் மையுடன் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு சின்னத்தை பார்வையிட்டும், உடன் நின்று புகைப்படம் எடுத்தும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

## அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் 78 ஆம் ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது



அழகப்பாஅரசு கலைக் கல்லூரியின் 78 ஆம் ஆண்டு விளையாட்டு விழா கல்லூரியின் உமையாள் அரங்கில் இன்று நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்து விழாவினைத் துவக்கி வைத்தார். வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர்பேகம் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் அசோக்குமார் ஆண்டறிக்கை வாசித்து அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் மாணவ மாணவிகள் பல்கலைக்கழக அளவிலும்,மாநில அளவிலும்,தேசிய அளவிலும் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றதை எடுத்துரைத்தார். குறிப்பாக தேசிய அளவில் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின்சார்பாககலந்து கொண்டு சிறப்பித்த மணிகண்ட சேதுபதி,பிரதிக் ஷா, கதிர்வேல், ராகவன், சந்தோஷ்குமார், அனுஷா மற்றும் தமிழ்நாடு மாநில அணியில் தேர்வு பெற்று தேசியப் போட்டிகளில்பங்கேற்றுசாதனை படைத்த நந்தா, முருகேசன் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அழகப்பா பல்கலைக்கழகத்தின் முன்னாள் உடற்கல்வி இயக்குநரும், திருச்செந்தூர் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் உடற் கல்வியியல் கல்லூரியின் முன்னாள் முதல்வருமான முனைவர் பெவின்சன் பேரின்பராஜ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். குறிப்பாக வள்ளல் அழகப்பச்செட்டியார் கல்வி நிறுவனங்களைக் துவக்கியபோதேவிளையாட்டிற்கும் முக்கியத்துவம்கொடுக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த விளையாட்டு மைதானங்களையும் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் என்றும்,அதைப்பயன்படுத்தி மாணவ மாணவிகள் விளையாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்றும் கூறினார். சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்ட சிவகங்கை மாஸ்டர் தடகள சங்கத்தின் துணைத் தலைவரும் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் முன்னாள் மாணவருமான துரைசிங்கம் மற்றும் ஆவுடையார் கோயில் அரசு மேல்நிலைப்பள்ளியின் பட்டதாரி ஆசிரியரும், அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் முன்னாள் மாணவருமான ரவிச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் சமுனா ஜெயின் அறச்செல்வி நன்றி கூறினார். இந்நிகழ்வில் ஆசிரியர்களும் ஆசிரியர்களல்லாப் பணியாளர்களும், மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் அசோக்குமார் செய்திருந்தார்.

## நந்தா பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கம்




வெள்ளிவிழாகொண்டாடி வரும் நந்தாபொறியியல் கல்லூரியில் இரண்டு நாட்கள் கொண்ட தேசிய அளவிலான கருத்தரங்கம் "பாதுகாப்புதன்னியக்கம் மற்றும் அச்சுறுத்தல் நுண்ணறிவு" என்கிற தலைப்பில் நடைபெற்றது.

கல்லூரியின் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறையும் புதுதில்லி அறிவியல் மற்றும் தொழில்துறைஆராய்ச்சி மையமும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி சண்முகன் தலைமை தாங்கினார்.

முதலாவது நாளன்று, கோவையில் செயல்பட்டு வரும் பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் கே. உமாமகேஸ்வரி சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இக்கருத்தரங்கில் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி, துறைத் தலைவர் முனைவர் பி. கருணாகரன், புதிய பொறியாளர்கள் துறையின் தலைவர் ஆர். திருநீலகண்டன் ஆகியோர் முன்னிலைவகித்தார்கள்.

முன்னதாக துறையின் உதவி பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம் கருத்தரங்கில் கலந்துக் கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார்.

இரண்டாவது நாளன்று, சென்னையில் செயல்பட்டு வரும் தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிநிறுவனத்தின் பேராசிரியர் முனைவர் எஸ்.வி. கோகிலவாணி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார். அப்போது உரையாற்றுகையில், செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் தானியங்கி அமைப்புகள், முன்கணிப்பு அச்சுறுத்தல் பகுப்பாய்வு மற்றும் அறிவார்ந்த பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து காணொலி காட்சி மூலம் விளக்கம் அளித்தார். இதனைத் தொடர்ந்து, கல்லூரியின் உதவி பேராசிரியர் எஸ்.டி. விஜயகுமார் அவர்கள் செயற்கை நுண்ணறிவுத் துறையில்ஏற்பட்டுவரும் மாற்றம் குறித்து பேசினார். பின்னர் மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு தகுந்த பதில் அளித்து உற்சாகப்படுத்தினார்.

இக்கருத்தரங்கில் மாநில அளவில் ஐநூறுக்கும் மேற்பட்ட பேராசியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டு பயன் அடைந்தார்கள்.

இந்த கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதிசண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப்,தஎஸ்.திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் பாராட்டினார்கள்.

நிகழ்வுகளின் முடிவில் செயற்கை நுண்ணறிவு மற்றும்தரவு அறிவியல் துறையின் உதவி பேராசிரியர் எம்.எம். கோகிலா நன்றியுரை வழங்கினார்.

## சர்ச்சை பேச்சு வழக்கு மே 12ல் நேரில் ஆஜராக பொன்முடிக்கு உத்தரவு



சென்னை: பெண்களை அவதூறாக பேசியதாக தொடரப்பட்ட வழக்கில், முன்னாள் அமைச்சர் பொன்முடி, வரும் மே மாதம் 12-ம் தேதி நேரில் ஆஜராக சென்னை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், தேனாம்பேட்டையில் உள்ள அன்பகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சர் பொன்முடி, சைவ, வைணவ சமயங்கள் குறித்தும், பெண்கள் குறித்தும் சர்ச்சைக்குரிய வகையில் பேசியிருந்தார். இது பெரும் சர்ச்சையை கிளப்பிய நிலையில், திமுக துணைப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து பொன்முடியை நீக்கி கட்சி தலைமைநடவடிக்கை எடுத்தது.

மேலும், பொன்முடியின் சர்ச்சை பேச்சு குறித்து தாமாக முன் வந்து வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், பொன்முடி மீது காவல் துறை ஏன் வழக்கு பதிவு செய்யவில்லை? என்றுகேள்விஎழுப்பி இருந்தது. தமிழகம் முழுவதும் பொன்முடிக்கு எதிராக அளிக்கப்பட்ட 214 புகார்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?எனபதில்அளிக்குமாறு காவல் துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதற்கு காவல்துறை தரப்பில், விசாரணை முழுமையாக நடத்தப்பட்டதாகவும், புகாரில் முகாந்திரம் இல்லாததால் 214 புகார்களும் முடித்து வைக்கப்பட்டதாக பதில் அளிக்கப்பட்டது. இதையடுத்து, வழக்கை முடித்து வைத்த உயர் நீதிமன்றம்,தனிநபர்கள்,நடுவர் நீதிமன்றத்தை அணுகலாம் என்று கடந்த செப்டம்பர் 16-ஆம் தேதி உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து, சென்னை மாநகராட்சி பாஜக கவுன்சிலர் உமா ஆனந்த், பொன்முடிக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கக்கோரி, சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதில், வெறுப்பு பேச்சு பேசிய முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு எதிரான புகாரை விசாரித்து,மதரீதியாக வெறுப்புணர்வை ஏற்படுத்துதல்,மத உணர்வுகளை புண்படுத்து தல் ஆகிய பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தார். இந்த புகார் மனு, எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மீதான புகார்களை விசாரிக்க சென்னை ஜார்ஜ் டவுன் நடுவர் நீதிமன்ற வளாகத்தில் அமைக்கபடுள்ள சிறப்புநீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, முன்னாள் அமைச்சர் பொன்முடி மார்ச் 24-ஆம் தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதி சி. சுந்தரபாண்டியன் முன்பு இன்று (மார்ச் 24) விசாரணைக்கு வந்தது. அப்போது, பொன்முடி நேரில் ஆஜராகவில்லை. அவரது தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், பொன்முடி நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனு நிலுவையில் இருப்பதால் நேரில் அவர் ஆஜராகவில்லை என்று தெரிவித்தனர். இதையடுத்து, பொன்முடி, வரும் மே மாதம் 12 ஆம் தேதி நேரில் ஆஜராக உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை ஒத்திவைத்தார்.



கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கோடு பகுதியை சேர்ந்தவர்கள் நெல்லை மாவட்டம் மூன்றடைப்பு பகுதியில் காரில் வந்து கொண்டிருந்த பொழுது கார் விபத்துக்குள்ளானது . இதில் காரில் பயணித்த ஐந்து பேருக்கும் பலத்த காயம் அடைந்தனர். அவர்களை மீட்டு நாகர்கோவில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

## பூட்டிய வீட்டில் ஆண் சடலம் மீட்பு



கன்னியாகுமரி மாவட்டம் புதுக்கடை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட விழுந்தயம்பலம் பகுதியில் மனைவியைப் பிரிந்து தனியாகவசித்து வந்தகோபி(50)என்பவர் தனது பூட்டிய வீட்டுக்குள் இறந்த நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டார்.

புதுக்கடை போலீசார் உடலை மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுமார் ஐந்து நாட்களுக்கு முன்பே இறந்திருக்கலாம் எனவும் உடல் முழுவதும் புழுக்களாக காணப்படுகிறது.



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் பெண்களுக்கான உலக மகளீர் உரிமைகள் பேரவை மற்றும் யுனைடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டி இன் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ. கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின்படி தமிழ்நாடு அரசு வருவாய் துறையின் கீழ் ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், சூரியம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் M. கோகிலவாணி, அவருடன் நில அளவையாளர் P.S கௌதமி மற்றும் கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் R .அருள்செல்வி ஆகியோர்களின் துறை சார்ந்த நீண்ட கால பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "WCWR ன் விருது" மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

## தூத்துக்குடி அண்ணாநகர் பகுதியில்
# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம்
## அமைச்சர் கீதாஜீவன் கலந்து கொண்டார்



தூத்துக்குடி அண்ணா நகர் பகுதி 34வது வார்டு, 3வது மைல் மெயின் ரோட்டில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் தலைமையேற்றார். மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் ஆனந்த சேகரன் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸின் தேசியசெயற்குழுஉறுப்பினர் ஏபிசி சண்முகம், பகுதிச் செயலாளர் ரவீந்திரன், ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா, காங்கிரஸ் தலைமை செயற்குழு உறுப்பினர் முரளிதரன், மாமன்ற உறுப்பினர் சந்திரபோஸ், மறுமலர்ச்சி திமுக சார்பில் நக்கீரன், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் மாடசாமி, விடுதலை சிறுத்தைகள் சார்பில் மாவட்ட பொருளாளர் வின்சென்ட், மாவட்ட தலைவர் மீராசா, மனிதநேய மக்கள் கட்சி சார்பில் மொய்தீன், மக்கள் நீதி மையம் சார்பில் ஜவகர், மண்டல தலைவர் ராஜேஷ், தேமுதிக மாவட்ட துணை செயலாளர் வல்லரசு துரை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் கீதா ஜீவன் கூறியதாவது:

தமிழ்நாடு மக்கள் எதிர்நோக்கும் சட்டமன்றத் தேர்தல் மிக முக்கியமானது. கடந்த ஐந்து ஆண்டுகளில் முதலமைச்சர் தலைமையில் மாநிலம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக கொரோனா காலத்தில் மருத்துவ வசதிகள் விரிவுபடுத்தப்பட்டு, கூடுதல் மருத்துவமனைகள், மருத்துவர்கள் மற்றும் மருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டு மக்களை பாதுகாத்தது இந்த அரசின் சிறப்பாகும். மக்களைத் தேடி மருத்துவம்போன்ற திட்டங்கள் மூலம் கிராமம் முதல் நகரம் வரை வீடுகளுக்கே மருத்துவ சேவை சென்றடைந்துள்ளது. பெண்களுக்கு வழங்கப்படும் மகளிர் உரிமைத்தொகை மூலம் பொருளாதார சுதந்திரம் கிடைத்துள்ளது. இதனால் குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. தமிழ்நாடு இன்று பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி மற்றும் கல்வி வளர்ச்சியில் நாட்டில் முன்னணியில் உள்ளது.

உயர்கல்வி பெறும் இளைஞர்களின் விகிதம் 52 சதவீதமாக உயர்ந்துள்ளது. மாணவர்களுக்கு பல்வேறு கல்வி உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சிகள் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசை விமர்சித்து வருகின்றன. ஆனால் உண்மை நிலை மக்கள் மத்தியில் வெளிப்படையாக உள்ளது. கடந்த ஆட்சியில் வளர்ச்சி நின்ற நிலையில் இருந்தது. ஆனால் தற்போதைய ஆட்சி அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கூட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள், திமுக செயல்வீரர்கள், மதிமுக நிர்வாகிகள் மகாராஜன், நக்கீரன், தொம்பை, பொன்ராஜ், பொய்யாமொழி, மனோகர், சுரேஷ்குமார், சரவணப்பெருமாள், பாலசுப்பிரமணியன், வீரபொம்முதுரை, சங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஐம்பொன் சிலை வாங்க ஆந்திராவிலிருந்து வந்த 4 பேரிடமிருந்து ரூ.1.90 லட்சம் பறிமுதல்



சென்னை: ஐம்பொன் சிலை வாங்க , ஆந்திராவிலிருந்து சென்னை வந்த 4 பேரிடமிருந்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு வரப்பட்ட ரூ.1.90 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை , மாதவரம் ரவுண்டானா அருகே நேற்று முன்தினம் இரவு தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அந்த வழியாக வந்த சொகுசு கார் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனை நடத்தினர்.

அதில், உரிய ஆவணங்கள் இன்றி ரூ.1.90 லட்சம் இருந்தது தெரிந்தது. அதை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர் . பின்னர், காரில் பயணம் செய்த 4 பேரை பிடித்து விசாரித்தனர்.

இதில், அவர்கள் ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தை சேர்ந்த நாகேஸ்வரராவ், சுதா, சுப்பாராவ், வெங்கடேஷ்வரராவ் என்பது தெரிந்தது. நாகேஸ்வரராவ் தனியார் பள்ளி ஒன்றில் பணியாற்றி வருகிறார்.

மேலும், இவர் தனது சொந்த ஊரில் கோயில் ஒன்று கட்டி வருவதும், கோயிலுக்காக ஐம்பொன் சிலை வாங்க சென்னை, பாரிமுனை, தேவராஜ் முதலி தெருவில் உள்ள கடை ஒன்றுக்கு பணத்துடன் வந்ததும் தெரிய வந்தது. அந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால், அதனை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

# தூத்துக்குடியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தெருமுனைப் பிரச்சாரம்; அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்பு



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தூத்துக்குடி மாநகரம் 1ஆம் இரயில்வே கேட்,காந்திசிலைஅருகே ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் உற்சாகமாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாண்புமிகு அமைச்சருமான திருமதி கீதாஜீவன் அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் கடந்த ஐந்து ஆண்டுச் சாதனைகளை விரிவாக விளக்கி உரையாற்றினார்.

அமைச்சர் பேசுகையில், கொரோனா காலத்தில் மக்கள் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில், மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க முதல்வர் எடுத்த தைரியமான முடிவுகள் முக்கியமானவை என்று குறிப்பிட்டார். கடைகள் திறக்கப்பட்டு,

இயல்பு வாழ்க்கை மீண்டும் தொடங்கியதன் மூலம் மக்கள் சிரமத்திலிருந்து மீண்டனர் என்றார்.

அதனைத் தொடர்ந்து, பெண்களுக்கு இலவச பேருந்துபயணம்போன்ற திட்டங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக செயல்படுத்தப்பட்டதையும், பின்னர் காலை உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார். "சொன்ன வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளார்; சொல்லாத திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளார்" என்று அமைச்சர் வலியுறுத்தினார்.தமிழ்நாட்டை இந்தியாவில் முன்னணி மாநிலமாக மாற்ற வேண்டும் என்பதே முதலமைச்சரின் நோக்கம் என்றும், அதற்காக தொழில் வளர்ச்சி, அடிப்படை வசதிகள், வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவற்றில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

திருவண்ணாமலை, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன என்றும்,தூத்துக்குடி மாவட்டத்திலும் பல தொழில் திட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன என்றும் கூறினார்.

மேலும், சூரிய மின் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன்,சுமார் 12 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். மகளிர் உரிமைத்தொகை,கலைஞர் கனவு இல்லம் திட்டம் போன்ற மக்கள் நலத்திட்டங்கள் மூலம் ஏராளமான மக்கள் பயனடைந்து வருவதாகவும், குறிப்பாக 2 லட்சம் பேருக்கு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒட்டப்பிடாரம் மற்றும் விளாத்திகுளம் பகுதிகளுக்கான குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மாநில துணைத்தலைவர் திரு ஏ.பி.சி. சண்முகம் அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சி தொடர வேண்டும் என வலியுறுத்தி பேசினார்.

இக்கூட்டத்தில் மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட பொருளாளர் சுசி ரவீந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜமோகன் செல்வின், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், பகுதி செயலாளர்கள் சுரேஷ்குமார், ஜெயக்குமார், ராமகிருஷ்ணன் , பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா, மாவட்ட பிரதிநிதி ராஜ்குமார், வட்டச் செயலாளர் சாமிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநகர மாவட்ட தலைவர் சி.எஸ். முரளிதரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் மாடசாமி, தனலட்சுமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி முத்து, மதிமுக மாநகர செயலாளர் முருகபூபதி, விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி விமல் வங்காளியார், தேமுதிக நிர்வாகிகள் தயாளலிங்கம், வல்லரசு துரை, சமத்துவ மக்கள் கழக நிர்வாகி அற்புதராஜ், மக்கள் நீதி மய்ய நிர்வாகி ஜவகர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மீராசா, மனிதநேய மக்கள் கட்சி யூசுப், மனிதநேய ஜனநாயக கட்சி முகமது ஹசன் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# நந்தா மருந்தியல் கல்லூரியில் 64வது தேசிய மருந்தியல் வார விழா



ஈரோடு நந்தா மருந்தியல் கல்லூரியில் "மருந்தாளுனர்கள் தடுப்பூசியின் ஆதரவாளர்கள்" என்கிற கருப்பொருளின் அடிப்படையில் 64வது தேசிய மருந்தியல் வார விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஈரோடு கேன்சர் சென்டரின் நிறுவனரும், முதல்வருமான புற்று நோய் நிபுணர் மருத்துவர் கே. வேலவன் சிறப்பு விருந்தினராகவும், பெருந்துறை சிப்காட்டில் செயல்பட்டு வரும் பிரிமோஸ் சைன்ஸ் நிறுவனத்தின் முனைவர் சி. கபிலன் கௌரவ விருந்தினராகவும் கலந்துக் கொண்டார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர் எஸ். நந்தகுமார் பிரதீப் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.முன்னதாக கல்லூரியின் முதல்வர் மருத்துவர் எஸ். செங்கோட்டுவேலு சிறப்பு விருந்தினாகள் மற்றும் மாணவர்களை வரவேற்று பேசினார்.

பின்னர், சிறப்பு விருந்தினர் புற்று நோய் நிபுணர் மருத்துவர் கே. வேலவன் சிறப்புரையாற்றுகையில், மருத்துவ சுகாதாரத்தினை ஒரு சமுதாயம் முழுமை பெறுவதற்கு மருந்தாளுனர்களின் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், மருந்தியல் படிப்பிற்கான பாடக் கொள்கைகள், அது சார்ந்த தொழில்த்துறை முன்னேற்றம் மற்றும் வேலைவாய்ப்புகள் போன்றவை மிகவும் அவசியம் என்று மாணவ - மாணவிகளிடம் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து கௌரவ விருந்தினர் முனைவர் சி. கபிலன் உரையாற்றுகையில், தனியார் மற்றும் அரசு மருத்துவத்துறைகளில் மருந்தாளுனர்களின் வேலைவாய்ப்பு மற்றும் ஆராய்ச்சி மருந்துகளின் ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த தொழில்நுட்பம், அதன் நுணுக்கங்களை கற்றுக் கொள்வதற்கான பயிற்சி முறைகள் என்பது கல்லூரியிலேயே தொடங்குகிறது என்று மாணவ-மாணவிகளிடம் எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் கடந்த கல்வியாண்டில் வெவ்வேறு பாடப்பிரிவுகளில் மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் மூன்று இடங்களை தக்க வைத்துக் கொண்டு வெற்றிப் பெற்ற மாணவ - மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். நிகழ்வின் முடிவில் பேராசிரியர் முனைவர் டி.பிரபா நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்திருந்த முதல்வர்,

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர் எஸ். திருமூர்த்தி அவர்கள் வெகுவாக பாராட்டி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# கட்சி தலைவர்களின் பிரச்சாரத்துக்கு கோவையில் தயாராகும் வாகனங்கள்!





கோவை: தமிழ்நாட்டில் இன்னும் சரியாக ஒருமாதத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. கூட்டணிகளும், தொகுதிப் பங்கீடுகளும் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில், சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அரசியல் தலைவர்கள் பிரச்சாரம் மேற்கொள்ளும் வாகனங்கள் கோவையில் முழுவீச்சில் தயாராகி வருகின்றன.

தமிழக சட்டப்பேரவைத்தேர்தல் வரும் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடைபெறுகிறது. ஆளும் கட்சியான திமுகவும், எதிர்க்கட்சியான அதிமுகவும் கூட்டணி வியூகங்களை வகுத்து வருகின்றன. இவை தவிர அரசியலில் புதிய வரவான தமிழக வெற்றிக் கழகம், தனித்து களமாடும் நாம் தமிழர் கட்சி மற்றும் சசிகலா - ராமதாஸ் என புது விதமாக பல முனை போட்டியை தமிழகம் எதிர்கொள்கிறது.

சட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணி மற்றும் தொகுதி ஒதுக்கீடு தமிழ்நாட்டில் சூடுபிடித்துள்ள நிலையில் கட்சியினர், தங்கள் தலைவர்களுக்காக அதிநவீன பிரச்சார வாகனங்களைத் தயார்படுத்தத் தொடங்கி விட்டனர். இதற்காகக் கட்சிகள் கொடுத்த ஆர்டர்களின் பேரில் கோவை சிவானந்தா காலனியில் உள்ள தனியார் நிறுவனத்தில் பிரச்சார வாகனங்கள் தயார் செய்யும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக, பிரச்சார வாகனங்களை தயார் செய்யும் நிறுவன உரிமையாளர் பி.வி. முகமது ரியாஸ் கூறியது: கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக டெம்போ டிராவலர் வாகனங்களை மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். கடந்த காலங்களில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரத்திற்காக வாகனங்களைத் தயார் செய்து கொடுப்பதற்கான ஆர்டர்கள் வந்தன. தொடர்ந்து அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப, வாகனங்களை தயார் செய்து கொடுத்ததால், கோவையில் மீண்டும் மீண்டும் எங்களுக்கு ஆர்டர்கள் வரத்தொடங்கின.

இதற்காகப் புதிதாக டெம்போ டிராவலர் வாகனங்களை வாங்கி, அதைப் பதிவு செய்து எங்களிடம் கொண்டுவந்து கொடுப்பார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்போம். 15 நாளில் தொடங்கி 2 மாதங்கள் வரை ஒரு வாகனத்தை செய்து தருவோம். தமிழகத்தைத் தவிர புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகா, கேரளம் ஆகிய மாநிலங்களில் இருந்தும் வாகனங்கள் கொண்டு வரப்படுகின்றன. கேரளாவில் இருந்து குறைந்த அளவே வாகனங்கள் கொண்டு வரப்படுகின்றன.

ஹைட்ராலிக் மேடை, தானியங்கிமேடை, குளிரூட்டி வசதியுடன் கூடிய சொகுசுப் படுக்கை, காற்றோட்ட வசதியுடன் கூடிய சொகுசு இருக்கை, மேஜை, கழிவறை, தொலைக்காட்சி, வைபை, போகஸ் லைட், ஒலிபெருக்கி, ஸ்பீக்கர், ஏர் சஸ்பென்சன், இரு பக்கவாட்டில் பாதுகாவலர்கள் பிடித்துக் கொண்டு நிற்பதற்கான ஃபுட்போர்டு, உயர் தரத்தில் குளிரூட்டி வசதி ஆகியவற்றை விருப்பத்துக்கேற்ப பொருத்தித் தருகிறோம். கழிவறை வசதி எல்லோரும் கேட்பதில்லை. கேட்பவர்களுக்கு மட்டும் செய்துகொடுக்கிறோம்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (24.03.2026) ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் இருந்து, சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் 8 சட்டமன்றத் தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் பணிக்கு கிடங்கு திறக்கப்பட்ட போது எடுத்த புகைப்படம்.



ஈரோடு மாவட்டம் மேட்டுக்கடை அருகே உள்ள தனியார் மண்டபத்தில் திமுக இளைஞரணி ஆலோசனை கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதல்வரும், திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை ஆற்றி இளைஞரணியினருக்கு சிறப்பான ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் திமுக துணை பொது செயலாளர்கள் அந்தியூர் செல்வராஜ்.எம்பி., அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், சு.முத்துசாமி, மதிவேந்தன், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, ஈரோடு வடக்கு மாவட்ட திமுக செயலாளர் என். நல்லசிவம், ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு.சுப்ரமணியம், திமுக இளைஞரணி துணை செயலாளர், கே.இ.பிரகாஷ் எம்.பி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜெ.திருவாசகம், திருவேங்கடம் உள்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ச.கந்தசாமி நேற்று (24.03.2026) 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற மூன்று சக்கரங்கள் பொருத்தப்பட்ட வாகன பேரணியினை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ச.கந்தசாமி (24.03.2026) 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற மூன்று சக்கரம் வாகன பேரணியிளை துவக்கி வைத்து, விழிப்புணர்வு குறித்த தொப்பியினை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி உட்பட பலர் உள்ளனர்.

# இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள் மட்டுமே பட்டியல் சமூகத்தினராக இருக்க முடியும்



புதுடெல்லி: இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள் மட்டுமே பட்டியல் சமூகத்தினரான இருக்க முடியும் என்று ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை, உச்ச நீதிமன்ற அமர்வு உறுதி செய்துள்ளது.

சாதி ரீதியாக பாகுபாடு காட்டிய, துன்புறுத்திய நபர்கள் மீது எஸ்சி - எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய பாதிரியார் ஒருவர் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.கே.மிஷ்ரா, நீதிபதி மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று தனது தீர்ப்பை அளித்தது.

அந்த தீர்ப்பில், "இந்த வழக்கில் மனுதாரர் கிறிஸ்தவத்தில் இருந்து தனது உண்மையான மதத்துக்கு மீண்டும் மதம் மாறியதாகவோ அல்லது மடிகா சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ வாதிடவில்லை. மேல்முறையீட்டாளர் தொடர்ந்து கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றி கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக கிராமத்தில் உள்ள வீடுகளில் ஞாயிறு தோறும் பிரார்த்தனைகளை நடத்தி ஒரு போதகராகச் செயல்பட்டு வருகிறார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

குற்றம்சாட்டப்பட்ட சம்பவம் நடந்த நேரத்தில் அவர் அந்த வீட்டில் பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த உண்மைகள், சம்பவம் நடந்த தேதியில் அவர் ஒரு கிறிஸ்தவராகவே இருந்தார் என்பதில் எந்த சந்தேகத்துக்கும் இடமளிக்கவில்லை.

இந்து, சீக்கிய, பவுத்த மதங்களைத் தவிர வேறு மதத்தைப் பின்பற்றும் எந்த ஒரு நபரும் பட்டியல் சமூகத்தை சேர்ந்தவராகக் கருதப்பட மாட்டார். வேறு ஏதேனும் ஒரு மதத்துக்கு மாறுவது பட்டியல் சமூக அடையாளத்தை இழக்க வழிவகுக்கும். வேறு மதத்துக்கு மாறிய ஒரு நபர், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கோர தகுதியற்றவர்" என உத்தரவிட்டனர்.

வழக்கின் பின்னணி: ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த சிந்தடா ஆனந்த் என்ற பாதிரியார், தனது கிராமத்தில் ஞாயிறுதோறும் பிரார்த்தனை கூட்டங்களை நடத்தி வந்துள்ளார். அக்கலா ராமி ரெட்டி உள்ளிட்ட சில நபர்கள் தன்னை தாக்கியதாகவும், தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அவர்கள் மீது எஸ்சி - எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சிந்தடா ஆனந்தின் மனுவை விசாரித்த ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஹரிநாத், "புகார்தாரர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியதன் மூலம் அவர் தனது பட்டியல் சமூக அடையாளத்தை இழந்துவிட்டார். எனவே, எஸ்சி - எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பைக் கோர அவருக்கு உரிமை இல்லை" என உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து சிந்தடா ஆனந்த், உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தார். அவரது மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத் தீர்ப்பை உறுதிப்படுத்தி உத்தரவிட்டுள்ளது.

# மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் 3 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு



சென்னை: மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மார்ச் 28-ம் தேதி முதல் மார்ச் 30-ம் தேதி வரை 3 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மையத்தின் விஞ்ஞானியும், அதிகாரியுமான வி.ஆர். துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் (மார்ச் 24) முதல் மார்ச் 26-ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்.

மார்ச் 27-ம் தேதி கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மார்ச் 28-ம் தேதி முதல் மார்ச் 30-ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை: தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்றும், நாளையும் (மார்ச் 24, 25) அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கான வாய்ப்பு குறைவு.

அதேநேரத்தில், இந்தப் பகுதிகளில் மார்ச் 26-ம் தேதி முதல் மார்ச் 28-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகரில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று அவர் தெரிவித்து உள்ளார்.

# போர் நிறுத்தம் என அறிவித்த டிரம்ப்; அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை ஈரான் திட்டவட்டம்




வாஷிங்டன்: ஈரானுடன் போர் நிறுத்தம் செய்துள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்திருந்த நிலையில், அதற்கு ஈரான் மறுப்பு தெரிவித்துள்ளது.

ஈரான் போர் தொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த அமெரிக்க அதிபர் டிரம்ப், அமெரிக்கா ஏன் இந்த போரில் இணைந்தது என்ற கேள்விக்கு பதிலளித்தார். அப்போது அவர், "ஈரானின் அணு ஆயுத தயாரிப்பை தாங்கள் தடுத்து நிறுத்தி இருக்கிறோம். இல்லையெனில் இது உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கும். சரியான நேரத்தில் அவர்களின் திட்டத்தை முறியடித்து விட்டோம். அவர்களின் அணு ஆயுத தளங்கள் அமெரிக்க முற்றிலுமாக அழித்துவிட்டது" என்றார்.

தாக்குதலை நிறுத்த திட்டம்

தொடர்ந்து பேசிய அவர், "நான் பதவியேற்ற பிறகு அமெரிக்கா பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வலுவடைந்திருந்த நேரத்தில், ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஈரானின் அணு சக்தி பலம் உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று எண்ணினோம். உடனடியாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினேன். அவர்கள் அனைவரும் ஈரானின் அணு செறிவூட்டும் திறன்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினர். அதன்படி, ஈரானின் முக்கிய தலைவர்கள் இருந்த இடங்களில் மீது தாக்குதல் நடத்தி அவர்களை வீழ்த்தினோம்" என்றார்.

போர் நிறுத்தம் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த டிரம்ப், "ஈரான் மீதான தாக்குதலை 5 நாட்களுக்கு ஒத்திவைத்துள்ளோம். முன்னதாக, ஈரானின் மின்விநியோகமையங்கள், எரிசக்தித் தளங்கள் மீது தாக்குதல் நடத்த தயாரானோம். ஆனால், அவர்கள் (ஈரான்) பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதை உணர்ந்தோம். எனவே, 5 நாள்கள் ஈரான் மீது தாக்குதல் நடத்துவதில்லை என்ற முடிவை தற்காலிகமாக எடுத்துள்ளோம்" என்றார்.

முன்னதாக, 48 மணி நேரத்திற்குள் ஹார்முஸ் நீரிணையை திறக்கவேண்டும் என்று தெரிவித்திருந்த டிரம்ப், அப்படி நடக்கவில்லை என்றால் ஈரான் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில், சமாதான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா தயாராக இருப்பதாக டிரம்ப் அறிவித்துள்ளது அவரின் நிலைப்பாட்டில் கடும் மாற்றம் ஏற்பட்டுள்ளதோ? என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

ஈரான் போர்

இஸ்ரேலுடன் இணைந்து, பிப்ரவரி 28 முதல் ஈரான் மீதான தாக்குதல் நடத்தி வரும் அமெரிக்கா, தற்போது 5 நாட்கள் போர் நிறுத்தம் அறிவித்துள்ளது உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலையை சீராக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள எரிசக்தி தளங்கள் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதைத் தொடர்ந்து ஹார்முஸ் நீரிணையை மூடியது. இதன் காரணமாக போருக்கு முந்தைய காலத்தில் சுமார் 75 டாலர்களாக இருந்த 1 பீப்பாய் கச்சா எண்ணெய், தற்போது 120 டாலர்களை வரை உயர்ந்தது.

இது, எரிவாயுக்காக இறக்குமதியை மட்டுமே பெரிதும் நம்பியிருக்கும் இந்தியா போன்ற நாடுகளை கடுமையாக பாதித்தது. இந்த சூழலில், டிரம்பின் அறிவிப்பு கச்சா எண்ணெய் சந்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.